<u>DEPOSITION OF WITNESS</u>
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
DHARAPURAM

SESSIONS CASE NO: 99/2018

Name : பி.கோமதி Deposition of Witness for : அ.சா.2

Father's Name : Caste :

Age : Calling :

Village : Taluk :

District :

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 01.02.2020

<u>முதல் விசாரணை</u>

சத்தியமாக சொல்கிறேன். நான் தற்போது திருப்பூர் மாவட்ட பல்லடம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருக்கிறேன். இதற்கு முன்பு காங்கயம் மதுவிலக்கு அமல் பிரிவில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது கடந்த 11.10.2013 ம் தேதி 14.00 மணியளவில் வெள்ளகோவில் சரகம் கோவை மெயின் ரோடு குட்டக்காடு பிரிவு அருகே மதுவிலக்கு காவல் ஆய்வாளர் மற்றும் உதவி ஆய்வாளர் மற்றும் காவலர்கள் முன்னிலையில் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தபோது அந்த வழியாக வந்த டாடா சுமோ விக்டர் டி.என் 09 எக்ஸ் 7729 என்ற எண்ணுள்ள வாகனத்தை நிறுத்தி தணிக்கை செய்தபோது அதன் ஓட்டுநர் முகவரியை விசாரித்தபோது தனது பெயர் மணிகண்டன் என்றும் தான் திண்டுக்கல் மாவட்டம் நரிப்பாறையை சேர்ந்தவர் என்றும் கூறினார். பின்பு அவரது வாகனத்தின் பின்புறம் ஆய்வாளர் அவர்கள் சோதனை செய்ய அதில் சுமார் 35 லி பிடிக்கக்கூடிய வெள்ளை நிற கேனில் சுமார் 10 லி திரவம் இருந்தது கண்டறியப்பட்டது. அதை ஆய்வாளர் முகர்ந்து பார்த்து விஷ நெடியுடன் கூடிய எரிசாராயம் என்பது தெரியவந்தது. பிறகு மேற்படி மணிகண்டன் என்பவரை கைதுக்கான காரணம் கூறி கைது செய்து 14.30 மணிக்கு அந்த இடத்தில் வைத்து கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து மேற்படி கேனில் இருந்த திரவத்தில் தலா 375 மி.லி பிடிக்கக்கூடிய இரண்டு கண்ணாடி பாட்டில்களில் தலா 350 மி.லி அளவிற்கு எடுத்து சோதனைக்காக மூடி சீல் வைக்கப்பட்டது. அதற்கு ஏ1 மற்றும் ஏ2 எனக் குறிப்பு செய்யப்பட்டது. பின்னர் மேற்படி வாகனத்தில் இருந்து சேர்மன் பைன் பிராந்தி என்று எழுதப்பட்ட லேபிள்கள் 1



கட்டுக்கு 2000 வீதம் 3 கட்டுகள் எடுக்கப்பட்டது. அதற்கான கைப்பற்றுதல் மகஜரில்

நானும் முதல்நிலை காவலர் செல்வகுமார் என்பவரும் சாட்சி கையெழுத்து செய்தோம். எங்கள் முன்னிலையில் மேற்படி எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தை காவல்ஆய்வாளர் வாங்கினார். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின்படி குட்டக்காட்டில் உள்ள குடோனுக்கு சென்று பார்க்க அங்கு 3 நபர்கள் அங்கிருந்து ஓட முற்பட்டனர். அப்போது காளியப்பன் என்ற ஒரு நபரை பிடித்தபோது அந்த குடோனில் கைப்பற்றப்பட்ட போலி மதுபானம் தயாரிக்க பயன்படும் பொருட்கள் அனைத்தும் அங்கே காணப்பட்டது. மேற்படி காவல் ஆய்வாளர் காளியப்பன் என்ற நபரை கைதுக்கான காரணம் கூறி கைது செய்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்றார். பின்னர் அக்குடோனில் காணப்பட்ட போலி மதுபானம் தயாரிக்க பயன்படும் பொருட்கள் மற்றும் வாகனங்களை கிராம நிர்வாக அலுவலர் மற்றும் கிராம உதவியாளர் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசஜரில் கைப்பற்றினார். காளியப்பன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் படி அங்கு நான்கு காவலர்களை பாதுகாப்பு பணிக்காக நியமித்து விட்டு பாப்பினி மலைப்பாளையம் பொண்மணி அத்திகாட்டு தோட்டம் வீட்டுக்கு சென்று பார்த்ததில் வீட்டுக்கு முன்பு நின்றுகொண்டிருந்த பொன்மணி என்பவரை கைது செய்து விசாரித்து அவரிடம் ஒப்புதல் வாக்குமூலத்தை காவல் ஆய்வாளர் பெற்றார். பொன்மணி வீட்டில் இருந்து போலி மதுபானம் தயாரிக்க பயன்படும் பொருட்களை கிராம நிர்வாக அலுவலர் மற்றும் உதவியாளர் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து அவர்களிடம் சாட்சி கையெழுத்து பெற்றார். பிறகு எதிரிகள் மற்றும் சொத்துக்களுடன் காங்கயம் மதுவிலக்கு காவல் நிலையம் வந்து நிலைய குற்ற எண் 717/2013 ச.பிரிவு 4 (1) (ஏஏ) உடனினைந்த (1— ஏ) டி.என்.பி ஆக்ட் மற்றும் டி.என்.ஆர்.எஸ் 5 6 7 மற்றும் இ.த.ச பிரிவு 420 468 471ன் கீழ் ஆய்வாளர் வழக்கு பதிவு செய்தார். பிறகு 25.10.2013 ம் தேதி 15.00 மணிக்கு காவல் ஆய்வாளர் மற்றும் உதவி ஆய்வாளர் மற்றும் காவலருடன் புறப்பட்டு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் வெள்ளகோவில் பஸ்நிலையம் அருகே நின்றுகொண்டிருந்த திண்டுக்கல் மாவட்டத்தை சேர்ந்த செவந்து என்பவரை விசாரிக்க தனது குற்றத்தை ஒப்புக்கொண்டவரை கைதுக்கான காரணம் கூறி காவல் ஆய்வாளர் கைது செய்தார். மேற்படி எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தை எனது மற்றும் உதவி ஆய்வாளர் காந்திமதி முன்னிலையில் பதிவு செய்தார். மேற்படி செவந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் போலி மதுபானம் தயாரிக்க பயன்படும் பொருட்கள் மற்றும் பிற உபகரணங்களை காட்டுவதாக கூறினார். அதன்படி பாப்பினி மலைப்பாளையம் பொன்மணி வீட்டிற்கு சென்று பொன்மணி வீட்டின் பின்புறம் புதரில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1 முதல் 12 வரையிலான



சொத்துக்களை ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் கைப்பற்றினார். அதற்கான
கைப்பற்றுதல் மகஜரில் நானும் உதவி ஆய்வாளரும் சாட்சி கையெழுத்து செய்தோம். ஆய்வாளர் இதுகுறித்து என்னை விசாரணை செய்தார்.

குறுக்குவிசாரணை 1 மற்றும் 5 முதல் 8 வரையான எதிரிகள் தரப்பில்

எதிரி செவந்து என்பவரை வெள்ளகோவில் பேருந்துநிலையம் எதிரில் கைது செய்தது

குறித்தும் அவரிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற்றது குறித்தும் அதனடிப்படையில் வழக்கு சொத்துக்கள் கைப்பற்றியது குறித்தும் ஆய்வாளர் என்னை விசாரித்தபோது சொல்லியுள்ளேன். மேற்படி எதிரி செவந்து நின்றிருந்ததாக சொல்லப்படும் இடம் மக்கள் அதிகம் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான். ஆய்வாளர் எதிரியை கைது செய்தபோது தனிநபர் சாட்சிகள் யாரையேனும் அழைத்து சாட்சியாக இருக்க சொன்னாரா என்றால் ஆய்வாளர் அழைத்தார் ஆனால் யாரும் சாட்சியாக இருக்க முன்வராததால் நாங்களே சாட்சியாக இருந்தோம். 7 வது எதிரி மணிகண்டனை கைது செய்தபோது நானும் காவல் ஆய்வாளரும் உதவி ஆய்வாளர் காந்திமதியும் திருச்சி மாவட்டத்தை சேர்ந்த காவல்ஆய்வாளர் பத்மா என்பவரும் இரண்டு காவலர்களும் இருந்தோம். எதிரி மணிகண்டனை கைது செய்யப்பட்டதாக சொல்லப்படும் இடம் அதிக போக்குவரத்து உள்ள பிரதான சாலை என்றால் சரிதான். அங்கு யாரும் தனிநபர்கள் சாட்சியாக இருக்க அழைக்கப்பட்டனரா என்றால் அழைக்கப்பட்டனர் ஆனால் யாரும் முன்வரவில்லை. எதிரி மணிகண்டன் நான் சொன்னதுபோல் சொன்ன நாள் மற்றும் நேரத்தில் சொன்ன இடத்தில் வைத்து சொன்ன விதத்தில் கைது செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. அதேபோல் 7 மற்றும் 8 வது எதிரிகள் ஆய்வாளரிடம் எந்த ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றாலும் அதனடிப்படையில் எந்த வழக்கு சொத்துக்களும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல.

குறுக்குவிசாரணை 3 மற்றும் 10 எதிரிகள் தரப்பில்

அ.சா.1 அழைத்ததன் பேரில்தான் நான் அவருடன் வாகன் சோதனைக்கு சென்றேன் என்றால் சரிதான். அ.சா.1 அப்போது எனக்கு நேரடி மேலதிகாரி என்றால் சரிதான். குட்டக்காடு குடோனுக்கு நான் சென்றபோது 15.45 மணி இருக்கும். மேற்படி குடோனில் சுமார் 2 மணிநேரத்திற்கு மேல் இருந்தோம். சரியான நேரம் ஞாபகமில்லை. குட்டக்காடு குடோன் அருகில் சுமார் எத்தனை வீடுகள் இருந்தன என்றால் ஒரு லைன் வீடு இருந்தது அதில் எத்தனை வீடுகள் இருந்தது என்பது ஞாபகமில்லை. குடோன் வடக்கு திசையை பார்த்து இருந்தது. அதற்கு சுற்றுச்சுவர் இருந்தது. சுற்றுச்சுவரில் எத்தனை நுழைவாயில் இருந்தது என்றால் ஒரே நுழைவாயில்தான். அந்த நுழைவாயில் கிழக்கு பக்கமாக இருந்தது. தப்பி ஓடிய 2 பேரும் எப்படி தப்பி ஓடினார்கள் என்பது எனக்கு தெரியாது. எத்தனை பேர் தப்பி ஓடினார்கள் என்றால் 2 பேர்தான் தப்பி ஓடினார்கள். மேற்படி குட்டக்காடு குடோனில் வைத்து என்னென்ன ஆவணங்கள் ஆய்வாளர் தயாரித்தார் என்றால் எனக்கு தெரிந்து ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் ஆகியன தயாரித்தார். ஒப்புதல் வாக்குமூலத்தையும் கைப்பற்றுதல் மகஜரையும் யார் எழுதினார்கள் என்றால் அது எனக்கு ஞாபகமில்லை. ஒப்புதல் வாக்குமூலமும் கைப்பற்றுதல் மகஜரும் கையார் எழுதப்பட்டதா அல்லது கணிணியில் பதிவு செய்யப்பட்டதா என்றால் அது எனக்கு ஞாபகமில்லை. மேற்படி குட்டக்காடு குடோனில் தனிநபர் சாட்சிகள் யாரேனும் இருந்தார்களா என்றால் ஞாபகமில்லை. குட்டக்காடு குடோனுக்கு மேற்படி திருச்சி ஆய்வாளர் பத்மா வந்திருந்தாரா என்றால் வாகனத்தணிக்கையின் போது இருந்தார் குடோனுக்கு வந்தாரா

என்பது எனக்கு ஞாபகமில்லை. குட்டக்காடு குடோனில் வைத்து என்னென்ன பொருட்கள் கைப்பற்றப்பட்டது என்றால் ஒரு ஆம்னி பேருந்து முதற்கொண்டு நிறைய பொருட்கள் கைப்பற்றப்பட்டது அதனால் என்னென்ன பொருட்கள் என சரியாக சொல்லமுடியாது. மேற்படி சம்பவத்திற்கு பிறகு நான் காங்கயம் மதுவிலக்கு பிரிவில் உதவி ஆய்வாளராக சுமார் 3 அல்லது 4 மாதங்கள் பணியில் இருந்தேன். அ.சா.1 எனக்கு முன்னதாகவே பணிமாறுதலில் சென்றுவிட்டார். அ.சா.1 க்கு பிறகு ஆய்வாளர் சரவணன் என்பவர் பணியில் சேர்ந்தார். மேற்படி சரவணன் காங்கயம் மதுவிலக்கு அமல் பிரிவில் தனிப்பொருப்பாகத்தான் பொறுப்பேற்றாரா என்றால் அது எனக்கு ஞாபகமில்லை. ஆய்வாளர் என்னை விசாரித்தபோது எனது வாக்குமூலம் கணிணியில் பதிவு செய்யப்பட்டது. நான் சொல்வதுபோல் எதிரி காளியப்பன் எனது முன்னிலையில் கைது செய்யப்படவில்லை என்றால் அவர் எந்த ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றாலும் அதனடிப்படையில் எந்த வழக்கு சொத்துக்களும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல. உண்மையில் இந்த சம்பவம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் நான் விசாரிக்கப்படவில்லை என்றாலும் சரியல்ல.

<u>குறுக்குவிசாரணை 2 மற்றும் 9 எதிரிகள் தரப்பில்</u>

அ.சா.1 ஐத்தவிர வேறு ஆய்வாளர்கள் என்னை விசாரித்து வாக்குமூலம் எதுவும் பதிவு செய்தார்களா என்றால் இல்லை. உண்மையில் நான் இந்த வழக்கில் நான் ஆய்வாளருடன் தணிக்கைக்கு செல்லவில்லை என்றாலும் ஆய்வாளர் எனது மேலதிகாரி என்பதால் அவர் தயாரித்த ஆவணங்களில் கையெழுத்து மட்டும் செய்துவிட்டு சாட்சியாக இருந்ததாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்கள் ஏதும் என் முன்னிலையில் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. கைப்பற்றுதல் மகஜர்களும் எனது முன்னிலையில் தயாரிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. 2 மற்றும் 9 எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.